# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

# பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY)

**1.இந்த திட்டத்தின் தன்மைகள் என்ன ?**

இந்த திட்டமானது ஒரு வருடத்திற்கு விபத்துக் காப்பீடு வழங்கும். வகையில் இருக்கும். விபத்தினால் உயிரிழப்போ அல்லது உடல் ஊனமோ ஏற்பட்டால் இழப்பீடு வழங்கும் வகையில் இருக்கும்.

**2. திட்டத்தின் நன்மைகள் மற்றும் காப்பீட்டுக் கட்டணம் ?**

இத்திட்டத்தின் நன்மைகள் :

| | **திட்டத்தின் நன்மைகள்** | **இழப்பீடு** |
|---|---|---|
| a. | இறப்பு | ரூ.2 லட்சம் |
| b. | இரு கண்கள் பார்வை இழப்பு (அல்லது) இரு கைகள் (அல்லது) இரு கால்கள் நிரந்தரமான ஊனம் ஏற்படுதல் ( அல்லது ) ஒரு கண்ணின் பார்வை இழப்பு மற்றும் கை (அல்லது) கால் இழப்பினால் நிரந்தரமான ஊனம் ஏற்படுதல் | ரூ.2 லட்சம் |
| c . | ஒரு கண் பார்வை இழப்பு அல்லது ஒரு கால் இழப்பினால் நிரந்தரமான ஊனம் ஏற்படுதல் | ரூ 1 லட்சம் |

சந்தாதாரர் காப்பீட்டுக் கட்டணமாக ஆண்டிற்கு ரூ 12 செலுத்த வேண்டும்.

**3. காப்பீட்டுக் கட்டணம் எவ்வாறு வசூலிக்கப்படுகிறது ?**

காப்பீட்டுக் கட்டணமானது சந்தாதாரரின் ஒப்புதல் மற்றும் உறுதி மொழி படிவத்தில் குறிப்பிட்டது போல வங்கிக் கணக்கில் இருந்து "ஆட்டோ டெபிட்" முறை மூலம் ஒரே தவணையாகப் பெறப்படும். சந்தாதாரர் ஒவ்வொரு வருடமும் பணம் பெறுவதற்கான ஒப்புதல் படிவம் கொடுத்து விட்டால்,மறுவரையறை செய்யும் வரை இத்திட்டமானது அமலில் இருக்கும்.

**4.காப்பீட்டுத் திட்டத்தை வழங்குவது / நிர்வகிப்பது யார் ?**

இந்த திட்டமானது பொதுத் துறை இன்சூரன்ஸ் நிறுவனங்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. எனினும் பிற காப்பீட்டு நிறுவங்கள் விரும்பினால் இதே போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் வங்கிகளுடன் புரிந்துர்ணர்வு ஒப்பந்தம் செய்து வழங்கலாம். வங்கிகள் தாங்கள் விரும்பும் எந்த ஒரு பொது காப்பீட்டு நிறுவனத்துடனும் இணைந்து இச்சேவையை வழங்கலாம்.

**5. இத்திட்டத்தில் சேர தகுதி என்ன ?**

வங்கிகளில் கணக்கு வைத்துள்ள 18 வயது முதல் 70 வயது வரை உள்ள அனைத்து நபர்களும் இத்திட்டத்தில் சேரலாம். ஒருவர் ஒன்று அல்லது பல வங்கிகளில் கணக்கு வைத்திருந்தால் ஒரே ஒரு வங்கி கணக்கு மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

**6. சேர்க்கைக் காலம் மற்றும் சேர்க்கை நடைமுறை என்ன ?**

காப்பீட்டுக் காலம் 1 ஜூன் 2015 முதல் 31 மே 2016 வரை ஒரு வருடத்திற்கு நடைமுறையில் இருக்கும். சந்தாதாரர்கள் மே 31 க்குள் அல்லது ஆகஸ்ட் 31 க்குள் சேர்க்கை விண்ணப்பம், ஒப்புதல் படிவம் அளிப்பதன் மூலம் இத்திட்டத்தில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு முழு ஆண்டிற்குமான காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து கொள்ளலாம்

அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் மே 31 க்கு முன் ஆட்டோ டெபிட் மூலம் பணம் பெறுவதற்கான ஒப்புதல் படிவம் வங்கிக்கு அளிப்பதன் மூலம் புதுப்பித்துக் கொள்ளலாம். .

தாமதமாகப் புதுப்பிப்பவர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு முழு ஆண்டிற்குமான காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து கொள்ளலாம்.

**7. தகுதியான நபர்கள் திட்டத்தின் துவக்கத்தில் சேராமல் அடுத்த வருடங்களில் சேர்ந்து கொள்ள முடியுமா ?**

ஆம், ஆட்டோ டெபிட் முறை மூலம் மூலம் பணம் பெறுவதற்கான ஒப்புதல் படிவம் வங்கிக்கு அளிப்பதன் மூலம் சேர்ந்து கொள்ளலாம். புதியவர்கள் இத்திட்டத்தில் சேர்வதற்கான தகுதியை அடையும் போது பணம் பெறுவதற்கான ஒப்புதல் படிவம் வங்கிக்கு அளிப்பதன் மூலம் சேர்ந்து கொள்ளலாம்.

**8. இந்த திட்டத்தில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இந்த திடத்தில் சேர முடியுமா ?**

இந்த திட்டத்தில் இருந்து வெளியேறிய நபர்கள் மீண்டும் சேர விரும்பினால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு முழு ஆண்டிற்குமான காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து கொள்ளலாம்.

**9. இந்த திட்டத்தின் மாஸ்டர் பாலிசி யாரிடம் இருக்கும் ?**

திட்டத்தில் பங்கேற்கும் வங்கிகளிடம் மாஸ்டர் பாலிசி இருக்கும்.கோரிக்கை செயல்முறைகளை எளிதான அனைவருக்கும் புரியும் வகையில் வங்கிகளின் ஆலோசனையுடன் பொது காப்பீட்டு நிறுவங்கள் முடிவு செய்யும்.

**10. இந்த திட்டம் எப்போது முடிவுக்கு வரும் ?**

ஒரு உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட காப்புறுதி கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு நிகழ்வின் போது முடிவுக்கு வரும்.

I. உறுப்பினருக்கு 70 வயது பூர்த்தியாகும் போது

II. உறுப்பினரின் வங்கிக் கணக்கு ரத்து செய்யப்படும் போது / புதுப்பித்தலுக்கான காப்பீட்டு கட்டணம் வங்கி கணக்கில் இல்லாத போது

III. உறுப்பினர் ஒன்றிற்கு மேற்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து காப்பீட்டுக் கட்டணம் செலுத்தினால் காப்பீட்டு தொகை ஒரு வங்கிக் கணக்கிற்கு மட்டும் கணக்கிடப்படும்..

**<u>11. வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் பங்கு என்ன ?</u>**

i. இந்த திட்டமானது பொதுத் துறை இன்சூரன்ஸ் நிறுவனங்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வழங்கப்படுகிறது எனினும் பிற காப்பீட்டு நிறுவங்கள் விரும்பினால் வங்கிகளுடன் புரிந்துர்ணர்வு ஒப்பந்தம் செய்து வழங்கலாம்.

ii. வங்கியானது உறுப்பினர்களின் விண்ணபப்ப் படிவத்தில் குறிப்பிட்டபடி காப்பீட்டுக் கட்டணத்தை ஒரே தவணையாக சந்தாதாரரின் வங்கிக் கணக்கிலிருந்து ஆட்டோ டெபிட் மூலம் கழித்து காப்பீட்டு நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

iii. உறுப்பினரின் சேர்க்கை விண்ணப்பம்,ஒப்புதல் படிவம் மற்ற படிவங்களைப் பெற்று பங்கேற்கும் வங்கிகள் தாங்கள் பொறுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும்.கோரிக்கை விண்ணப்பம் பெறப்பட்டால் பொதுக் காப்பீட்டு நிறுவனத்திடம் மேற்குறிப்பிட்ட படிவங்களை சமர்பிக்க வேண்டும். காப்பீட்டு நிறுவனங்கள் எப்போது கேட்டாலும் மேற்குறிப்பிட்ட படிவங்களை வங்கி சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>12. காப்பீட்டுக் கட்டணம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?</u>**

- பொதுத் துறை / பிற காப்பீட்டு நிறுவனங்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் : ரூ 10(ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )
- வங்கி தொடர்பாளர் / பிரதிநிதிக்கான ஊக்க தொகை : ரூ 1 ( ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )
- பங்கேற்கும் வங்கிக்கு அளிக்கப்படும் தொகை : ரூ 1 ( ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )

**<u>13. வேறு காப்பீட்டு திட்டங்களில் சேர்ந்துள்ளவர்கள் இந்த திட்டத்தில் சேர முடியுமா ?</u>**

ஆம். முடியும்